**மாத்தளை பிரதேச சபை - 2023**

**----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட

மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாவாண்டிற்குரிய சடலங்கை தகனம் செய்வதற்காக கிடைத்த வருமானம் ரூபா 50,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) வாடகைக்கு பெற்றுக் கொண்ட கொங்க்ரீட் மீளாய்வாண்டிற்கான ஆதனக் கடன் வட்டி வருமானம் ரூபா 114,035 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விடுபாடுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுப்பதாக | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 12 ஆந் திகதிய 1/3/2/3 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் 9 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் மேற்கொள்ள்பபட்டிருந்த ரூபா 587,000 ஆன கெப் வண்டி திருத்தமொன்று அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | அங்கீகாரத்தை விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | செயற்பாடடை நிறைவேற்ற முன்னர் மறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,617,757 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 58,303,615 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,349,000 | 1,248,754 | 1,167,685 | 565,808 | 1,349,000 | 1,167,566 | 1222,488, | 484,739 |
| (ii) | வாடகை | 1,200,000 | 502,564 | 500,919 | 23,500 | 250,000 | 334,775 | 321,120 | 21,855 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,275,000 | 2,027,277 | 2,024,277 | 5,000 | 1,200,000 | 980,996 | 978,966 | 2,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,500,000 | 9,914,652 | 10,427,062 | 3,402,476 | 4,000,000 | 7,805,037 | 8,291,645 | 3,914,886 |
| | மொத்தம் | 14,324,000 | 13,693,247 | 14,119,943 | 3,996,784 | 6,799,000 | 10,288,374 | 10,814,219 | 4,423,480 |

### 2.3 மிகை அறவீடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய வருடங்களில் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா. 537,018 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | மிகை அறவீடுகளில் உள்ளடக்கப்பட்ட நிலுவை மிகை அறவீட்டை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் மிகை அறவீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 38,062,872 ஆக இருந்ததுடன். அதில் 1 வருடத்திற்கு மேற்பட்ட | நீண்டகாலமாக நிலுவையை மீதிகளைப் முறையான அங்கீகாரமொன்றுடன் பதிவழிப்பதற்காக | நிலுவை வருமானமங்களை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 5 வருடங்களுக்கும் குறைந்த காலப்பகுதியில் மீதி ரூபா 3,382,195 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதி ரூபா 1,276,232 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் மேலும் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி செயற்திட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 15,917,739 ஆக இருந்ததுடன். அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 2,395,599 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 157,543 தொகையை தீர்வு செய்திருக்கவில்லை. | விரைவில் கணக்குகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 43 வியாபார துறைகளுக்குரிய 151 வியாபார நிறுவனங்களில் குத்தகை பதிவேட்டில் காணப்பட்ட போதும் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் வியாபார வரி செலுத்தும் 23 வியாபார நிறுவனங்கள் மாத்திரம் இனங்காணபட்டமை காரணமாக சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் அனைத்து வியாபார நிறுவனங்களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் காலங்களில் அனைத்து வியாபாரங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அத்த தகவல்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணிப்பீட்டு நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் வாடகை அறவிடப்படாமை காரணமாக ரூபா 1,555,949 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடு 2023.01.20 ஆம் திகதி கிடைத்தவுடன் 2024 ஜனவரி 01 முதல் புதிய மதிப்பீட்டை செயலறபடுத்துவதாக | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் உரித்தான வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபைக்கு சொந்தமான 7 வாகனங்கள் எரிபொருள் பரிசோதனைக்காக பயன்படுத்திய வீதியில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக பரிசோதனயின் பெறுபேறுகள் நிராகரிக்கப்பட்டமை காரணமாக அதற்காக செலவிடப்பட்ட ரூபா 45,703 ஆன எரிபொருள் செலவினம் விளைவற்ற செலவினமாக அவதானிக் கப்பட்டது. | மீண்டும் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டதால் சபைக்கு கடமை ரீதியாகவும் கடமைகளில் வெளிப் படைத்தன்மையை பேணி செல்வதற்கு இயலுமை உருவாகியதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்த |
| (ஊ) | பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு விலை கோருவதற்காக 03 மொழிகளில் 03 தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடப்பட்டி ருந்ததுடன் அவ் விளம்பரங்களின் மூலம் கூறு விலைகளை சமர்ப்பிப்பதற்காக போதியளவு காலம் வழங்கப்படாதிருந்த மையால் ஒவ்வொரு உருப்படிகளில் இருந்து கொள்வனவு செய்யப்படும் அளவு குறிப்பிடப்படாமையால் பெற்றுக் கொள்ளக்கூடிய கழிவு அளவு முறையாக கிடைக்காததன் பேரில் 2021 ஜனவரி 26 ஆம் திகதி மீண்டும் விலை கோரல் மேற்கொள்ளப்பட்டதால் ரூபா 54,855 ஆன விளைவற்ற செலவினம் ஒன்றை மேற்கொள்வதற்கு நேர்ந்ததாக அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப பத்திரிகை அறிவித்தலை வெளியிடும் போது போதிய அளவு காலம் வழங்கப்படாமை காரணமாக மிகவும் போட்டி விலைகளை பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் விலை கோரல் மேற்கொள்ளப்பட்டதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 06 பதவிகளில் 15 வெற்றிடங்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளில் இல்லாத 04 பதவிகளுக்கு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அப்பதவிகளை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | செயற்திறனான சேவைக்காக விரைவில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்ற சென்ற, சேவையை விட்டுச்சென்ற மற்றும் மரணித்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து 1 வருடத்திற்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவை கடன் மொத்தம் ரூபா 1,759,801 ஆன கடன் மீதிகள் அறவிடப்படாதிருந்ததுடன் இட மாற்றம் பெற்று வந்த 7 பேரிடமிருந்து ரூபா 1,390,229 ஆன கடன் மீதிகள் தீர்வு செய்யப்ப்டிருக்கவில்லை. | விரைவில் ஊழியர் கடன் மீதிகளைத் தீர்வு செய்து கணக்கு களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன் மீதிகளைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார அமைச்சிலிருந்து நன்கொடையாக கிடைத்த இரண்டு பிணியாளர் வண்டிகளின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | உரித்தை கையேற்கும் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் 38 வருமான விடயங்களுக்குரிய ரூபா 130,935,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் அறவிடப்படாதிருந்ததுடன் 70 செலவின விடயங்களுக்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 116,408,940 ஆன தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்த 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான சதவீதத்தினால் சேமிக்கப்பட்டிருந்தது. 26 செலவின விடயங்களில் மொத்தம் ரூபா 18,163,000 ஆன மொத்த தேறிய நிதி ஏற்பாடு செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டமை காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தவிர்க்க முடியாத காரணங்களினால் பாதீட்டின் இறுதி இலக்குகளை நிறைவேற்ற முடியாமல் இருந்ததாக | வருமானம் சரியாக எதிர்வுகூறப்படுவதற்கும் தேவைகளை இனங்கண்டு கவனமாக செலவினங்களை எதிர்வுகூறி பாதீட்டை தயாரிக்க வேண்டும். |